# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THIRUVIDAIMARUTHUR.

Deposition of Witness for : PW-1
Date : 08.08.2024
Case No. : **O.S. 494/2019**
Nationality : Indian
Name : மாதவி
Religion :
Father's/Husband's Name : சிவசுப்ரமணியன்
Age : 41
Village :
Taluk :

<u>வா.சா.1</u>

சாட்சி சத்திய பிராமாணம் செய்து விசாரிக்கபடுகிறார்.

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி.**

எனக்கு எந்த தேதியில் திருமணம் நடைபெற்றது என்றால் 26,08.2009 ம் தேதி நடைபெற்றது. தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் திருமண அழைப்பிதழ் எனது திருமண அழைப்பிதழ்தான். ( மேற்படி திருமண அழைப்பிதழ் **பி.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது) . 3 ம் வாதி கலைச்செல்வி எனது சகோதரி என்றால் சரிதான். தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் திருமண அழைப்பிதழ் எனது சகோதரி கலைச்செல்வியின் திருமண அழைப்பிதழ்தான். ( மேற்படி திருமண அழைப்பிதழ் **பி.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது) . மேற்படி திருமண அழைப்பிதழ்களில் பிரதிவாதி மற்றும் அவரது தந்தை பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் எனது திருமணத்தில் பிரதிவாதியும் அவரது தகப்பனாரும் கலந்து கொண்டார்கள். எனது சகோதரி கலைச்செல்வியின் திருமண பத்திரிக்கையில் பெயர் போடப்பட்டிருந்தாலும் அவர்கள் கலந்து கொள்ளவில்லை.

2. தாவா சொத்துக்களுக்கு நாங்கள் வரி செலுத்தி வருகிறோமா என்றால் நாங்கள்தான்

வரி செலுத்தி வருகிறோம். அந்த வரி ரசீதுகளை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாக்கல் செய்துள்ளோம். வழக்குரையில் கண்ட ஆவண விவரத்தில் வரி ரசீதுகள் தாக்கல் செய்ததாக குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். பிசாஆ 1 வழக்குரையில் 24 வது ஆவணமாக கிஸ்து ரசீதுகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். கோவிந்தராஜனின் மனைவி சகுந்தலா இருப்பதை மறைத்து எங்கள் பெயரில் பட்டா மாற்றம் செய்தோம் என்றால் சரியல்ல. எனது தகப்பனாருக்கு என்ன தொழில் என்றால் விவசாயம். கூட்டு குடும்ப சொத்துக்களின் அசல் ஆவணங்கள் அனைத்தும் ராமலிங்கத்திடம் இருந்தது என்றால் சரியல்ல. எனது அப்பா பெயரில் இருந்த சொத்துக்களின் ஆவணம் அனைத்தும் எனது அப்பா வசம்தான் இருந்தது.

3. பிசாஆ 1 வழக்குரையில் ஆவணங்கள் பட்டியலில் 1 முதல் 4 ஆவணங்களாக வீராசாமி பெயரில் ஏற்பட்டுள்ள ஆவணங்களும் 5 முதல் 12 ஆவணங்களாக கோவிந்தராஜ் பெயரில் ஏற்பட்டுள்ள கிரய சாசன ஆவணங்களும் தாக்கல் செய்யப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். தற்போது என்ன சாகுபடி பருவம் என்றால் குறுவை பருவமாகும். மேற்படி பாகப்பிரிவினை வழக்கில் கண்ட சொத்துக்களை அனைத்தும் பிரதிவாதி சாகுபடி செய்து வருகிறார் என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கு நாங்கள்தான் உரிமையாளர் என விளம்புகை செய்யக்கோரி வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் மற்றும் இதர சொத்துக்கள் கூட்டு குடும்ப சொத்துக்கள் என்றாலும் அதில் எங்களுக்கு தனிப்பட்ட முறையில் எந்த உரிமையும் இல்லை என்றாலும் சரியல்ல. சொத்து யார் பெயரில் உள்ளதோ அவர் பெயரில்தான் மின்சார இணைப்பு வழங்கப்படும் என்றால் சரிதான். தாவா வயல்களில் உள்ள மின்சார இணைப்புகள் இலவச மின்சார இணைப்புகள் என்றால் சரிதான். தாவா வயல்களில் பிரதிவாதியின் தகப்பனாரால்தான் ஆழ்துளை கிணறுகள் அமைக்கப்பட்டது என்றாலும்

அதனை மறைத்து பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றாலும் சரியல்ல. பிரதிவாதி பிரச்சனை செய்ததாக சொல்லியுள்ள சம்மந்தமாக நாங்கள் காவல் துறையில் புகார் எதுவும் அளித்தோமா என்றால் பந்தநல்லூர் காவல் நிலையத்தில் புகார் அளித்தோம். 2016 ம் ஆண்டு அக்டோபர் மாதம் புகார் அளித்தோம். அந்த புகார் மனுவையோ ரசீதையோ நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் எனக்கு சரியாக தெரியவில்லை. மேற்படி விவரம் யாரை கேட்டால் தெரிய வரும் என்றால் எனது கணவரை கேட்டால் தெரியும். இந்த வழக்கில் என் கணவரை சாட்சியாக விசாரிக்க போகிறேனா என்றால் இல்லை. நான் இவ்வழக்கில் ஆஜராகும்போதெல்லாம் எனது கணவரும் என்னுடன் வருவார் என்றால் சரிதான்.

4. தாவா சொத்துக்கள் மற்றும் இதர சொத்துக்கள் பிரதிவாதியின் அனுபவத்தில்தான் உள்ளது என்றாலும் அதனை மறைத்து பொய்யான விவரங்களின் அடிப்படையில் வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றாலும் சரியல்ல. தாவா சொத்துக்கள் கூட்டு குடும்ப சொத்துக்கள் என்பதால் அதனை பொறுத்து நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோருவதற்கு எங்களுக்கு உரிமையில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதிக்கு எதிராக பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளதால் நாங்கள் அவருக்கு இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டுள்ளோம் என்றால் சரியல்ல.

Taken down by Typed to my dictation
in Open Court read over to the witness
admitted and acknowledged by
him/her to be correct.

Sd/- N. Sivapalani,
District Munsif cum Judicial Magistrate,
Thiruvidaimarudur.